(ஊ) குறித்துரைக்கப்பட்ட வணிகப்பொருள் சந்தைகள் (அமைவிடத்தை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, 1996

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு குறித்துரைக்கப்பட்ட வணிகப்பொருள் சந்தைகள் (அமைவிடத்தை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு குறித்துரைக்கப்பட்ட வணிகப்பொருள் சந்தைகள் (அமைவிடத்தை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(எ) வேளாண் பல்கலைக்கழக (திருத்த) சட்டமுன்வடிவு, 1996

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக (திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.